வடமராட்சிக்கான
உதயன்
கிளைக் காரியாலயம் தற்போது
மாலுசந்தி அல்வாயில்
கிளைப் பணிமனையில் செய்திகள் மற்றும் விளம்பரங்களை காலை 08.30 முதல் இரவு 10.00 மணிவரை கையளிக்கலாம்.
T.P: 021 4927 454, 077 120 9996

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 86

திங்கட்கிழமை 20 பெப்ரவரி 2023 | மாசி 08 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 12

## வடக்கு - கிழக்கு தேர்தல்களில் பா.ஜ.க. போட்டியிடலாமாம்!



### ஆச்சரியப்பட எதுவுமில்லையென விமல் வீரவன்ஸ கிண்டல்

யாழ்ப்பாணம், பெப். 20
வடக்கு - கிழக்கு மாகாணங்களில் எதிர்வரும் காலங்களில் தேர்தல்களின்போது மோடியின் பாரதிய ஜனதா கட்சி போட்டியிட்டாலும் நாம் அதிர்ச்சியடையத் தேவையில்லை என்ற நிலையையே தற்போது »11

## 13ஆம் திருத்தத்துக்கு முடிவுகட்டும் நேரம் இது

### அண்ணாமலையை எச்சரிக்கிறார் சரத் வீரசேகர



யாழ்ப்பாணம், பெப்.20
வடக்கும், கிழக்கும் இணைக்கப்படவேண்டும், அது தமிழர் தாயகம் என்பதை மறைமுகமாக எடுத்தியம்பும் வகையிலேயே தமிழக பாரதிய ஜனதா கட்சித் தலைவர் கே.அண்ணாமலை கருத்து வெளி »11

## பருத்தித்தீவில் மீண்டும் நோட்டமிட்ட சீனர்கள்

யாழ்ப்பாணம், பெப்ரவரி 20
யாழ்ப்பாணத்தின் தீவுப் பகுதிகளில் சீனர்களின் கடலட்டைப் பண்ணை தொடர்பான விவகாரங்கள் மெதுவாக அடங்கியுள்ள சூழலில், இரகசியமாக பருத்தித்தீவுக்கு இரண்டு சீனர்கள் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். அவர்களை, பிரதேசசபைத் தவிசாளர் ஒருவரின் கொலை தொடர்பில் பிரதான சந்தேகநபராகப் பெயரிடப்பட்டுள்ளவரே அழைத்துச் சென்றுள்ளதாக தீவகப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.
»10

## இரகசியமாக வந்துசென்ற அமெரிக்க விமானங்கள்

### சந்தேகம் எழுப்புகிறார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

யாழ்ப்பாணம், பெப். 20
இலங்கையில் பல விடயங்கள் மிகவும் இரகசியமான முறையில் இடம்பெற்று வருவதாகவும் அண்மையில் மிகப் பெரிய இரண்டு அமெரிக்க விமானங்கள் இலங்கைக்கு வந்து சென்றுள்ள »11

## எப்படியிருந்தவர் இப்படியாகிவிட்டாரே!



கொழும்பு, பெப். 20
முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய மற்றும் அவரது மனைவி ஆகியோர் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் சரக்கு விமான வாசல் ஊடாகவே மியான்மருக்குச் சென்றனர் என கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி விடுமுறைக்காக மியான்மர் »11

## பௌத்த மறுமலர்ச்சியை 2023இல் ஏற்படுத்துங்கள்

### ஜனாதிபதியிடம் கோரிக்கை

கொழும்பு, பெப். 20
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடங்களுடன் விசேட கலந்துரையாடலொன்றில் நேற்று ஈடுபட்டார். கண்டி ஜனாதிபதி மாளிகையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.
»11

## இன்று இரவு 7 மணிக்கு மின்விளக்குகளை அணையுங்கள்

### கட்டண உயர்வுக்கு எதிரான அடையாளப் போராட்டம்

கொழும்பு, பெப். 20
மின் கட்டண உயர்வுக்கு எதிராக இன்று இரவு 7 மணிக்கு அனைத்து மின்விளக்குகளையும் அணைக்குமாறு மக்கள் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய இயக்கம் பொது »11

## தேர்தல் ஒத்திவைப்பு மனு இன்று விசாரணைக்கு

கொழும்பு, பெப். 20
உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்குமாறு கோரி, ஓய்வுபெற்ற இராணுவ கேணல் டபிள்யூ. எம். ஆர். விஜேசுந்தர தாக்கல் செய்த மனு உயர் நீதிமன்றத்தில் இன்று பரிசீலிக்கப்படவுள்ளதாகத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.
»11

## தேர்தல் பணிகள் நிறுத்தம்: பரப்புரைகளோ அதிவேகம்

யாழ்ப்பாணம், பெப். 20
உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பான அனைத்துப் பணிகளும் நேற்றுமுன்தினம் முதல் இடைநிறுத்தப்பட்டுள்ள போதும் தமிழ்த் தேசியக் கட்சிகள் தமது தேர்தல் பரப்புரைகளைத் தீவிரப்படுத்தியுள்ளன.
உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் முடிவடைந்த பின்னரும் தேர்தல் பரப்புரைகள் சூடுபிடித்திருக்கவில்லை. உயர் நீதிமன்றத்தில் தேர்தலை நடத்தக்கோரிய மனு மீதான விசாரணையின் பின்னரும் தேர்தல் »11

### கரைதுறைபற்றில்

## தமிழ் அரசுக் கட்சி 'குறுக்குவழி' வியூகம்!

முல்லைத்தீவு, பெப்.20
இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் கரைதுறைபற்று பிரதேசசபைக்கான வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ள நிலையில், அந்தச் சபையில் போட்டியிடும் ஐக்கிய தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களைப் பதவிதுறக்கச் செய்து »11

## தேர்தலை நடத்த வைப்போம்!

### இப்படிச் சொல்கிறார் சுமந்திரன்

முல்லைத்தீவு, பெப். 20
தேர்தல் நடக்குமா? இல்லையா? என்ற கேள்விக்கு மத்தியில் நாங்கள் பரப்புரை செய்கின்றோம். தேர்தல் நடக்கவேண்டும், நடத்த வைப்போம். நாங்கள் தேர்தல் நடக்கவேண்டும் என்று மக்கள் மத்தியில் சொல்கின்றோம். »10

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.எம்.எப். பதிலின் பின்னரே அமைச்சரவையில் மாற்றம்

கொழும்பு, பெப். 20
ஒருபில்லியன் டொலர் கடன் பெறுவது தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் பச்சைக்கொடி காட்டியுள்ளது என்று புளூம்போர்க் இணையத்தளம் குறிப்பிட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்திடம் சாதக மான பதில் கிடைத்தவுடன் அமைச் சரவை மாற்றியமைக்கப்படும் என ஜனாதிபதி சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவித்துள்ளார் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.
அமைச்சுக்களின் செயற்பாடுகள் தொடர் பில் ஜனாதிபதி அறிக்கை கோரியுள்ள தோடு அதில் எரிசக்தி, பொலிஸ் மற்றும் வர்த்தக அமைச்சுக்கள் ஆகிய மூன்று அமைச்சர்களே வெற்றிகரமாகச் செயற் பட்டுள்ளது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜ பக்சவால் நியமிக்கப்பட்ட தற்போதைய அமைச்சரவையை மாற்றுமாறு ஜனாதி பதிக்கு நெருக்கமான நபர்கள் மற்றும் அமைப்புக்கள் கோரியுள்ளன. இந்த நிலையில் விளையாட்டு, நெடுஞ்சாலை கள், போக்குவரத்து, வெகுஜன ஊடகத் துறை, துறைமுகம், தொழில் அமைச்சு என்பன அமைச்சரவை மாற்றத்தின் போது மாற்றப்படவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. (எ-14)

## நீர்க் கட்டணம் உயரும்

கொழும்பு, பெப். 20
மின்சாரக் கட்டணங்கள் வெகு வாக அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், நீர்க் கட்டணமும் அதிகரிக்கப்படும் என்று நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட் டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித் துள்ளார்.
தலவாக்கலையில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
இதேவேளை- நீர்க் கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் இன் னும் இறுதித் தீர்மானம் எடுக் கப்படவில்லை என தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப் புச் சபையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (எ-14-இ)

## தேயிலை ஏற்றுமதி வீழ்ச்சி

கொழும்பு, பெப். 20
நாட்டில் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டு தேயிலை ஏற்றுமதி 9.4 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.
கடந்த ஜனவரி மாதம் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய் யப்பட்ட தேயிலையின் மொத்த அளவு 17.56 மில்லியன் கிலோவாகும்.
2022 ஜனவரியில் இந்தத் தொகை 19.38 மில்லியன் கிலோவாகப் பதிவாகியுள்ளது. (எ-14-இ)

## மின்கட்டண அதிகரிப்பு விடுதிகளை மூடும் நிலை

கொழும்பு, பெப். 20
தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள மின் கட்டண அதிகரிப்புக் காரணமாக விடுதிகளை மூடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று நடுத்தர விடுதிகளின் உரிமையாளர்கள் தெரி வித்துள்ளனர்.
இது தொடர்பில் ஹோட்டல் உரிமையாளர் சங்கத்தலைவர் சாந்திகுமார் தெரிவித்துள்ள தாவது:-
அரசாங்கத்திடமிருந்து சாதகமான பதில் கிடைக்காவிட்டால் பல ஹோட்டல்கள் மூட வேண்டிய நிலைக்குத் தள்ளப்படும். உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களைத் தொடர்ந்து ஏற் கனவே ஹோட்டல் துறை நட்டத்தில் இயங்கி வருகிறது.
இந்தநிலையில் தற்போது நடைமுறைப்படுத் தப்பட்டுள்ள மின்கட்டண அதிகரிப்புக் கார ணமாக விடுதி உரிமையாளர்கள் தற்கொலை செய்யும் நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளனர்.
உல்லாசப் பயணிகளின் வருகையை அதிகரிப் பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் பல ஹோட்டல்கள் மூடவேண்டிய நிலை ஏற் படும்.
இந்தியா, சீனா போன்ற நாடுகளிலிருந்து உல் லாசப் பயணிகளின் வருகையை எதிர்பார்க் கிறோம். அரசாங்கம் உல்லாசப்பயணிகளின் வருகையை ஊக்குவிக்காவிட்டால் பல ஹோட் டல்களை மூடுவதைத்தவிர வேறு வழியில்லை - என்றார். (எ-14-6)

## புலம்பெயர் பறவைகள் பூங்கா ஹந்தானையில்

கொழும்பு, பெப். 20
கண்டி - ஹந்தானையில் ஸ்தாபிக் கப்பட்டுள்ள இலங்கையின் முத லாவது புலம்பெயர் பறவைகள் பூங்கா மற்றும் சுற்றாடல் சுற்றுலா வலயம் இன்று திங்கட்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.
ஹந்தானை சர்வதேச பறவை கள் பூங்கா மற்றும் பொழுது போக்கு மையம் என பெயரிடப் பட்டுள்ள இந்தப் பூங்கா, ஜனா திபதி ரணில் விக்கிரமசிங்கவால் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு திறந்து வைக்கப்படவுள் ளது. இந்தப் பூங்கா எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் பொதுமக்கள் பார்வைக்காகத் திறக்கப்படும்.
490 மில்லியன் ரூபா செலவில் 40 வருட காலப்பகுதியில் இலங் கைக்குச் சொந்தமான பறவைகள் பற்றிய ஆய்வின் அடிப்படையில் இந்தப் பூங்கா நிறுவப்பட்டுள்ளது. (எ-14-இ)

### அரச உயரதிகாரிகளுக்கு

## வியாபார வகுப்பு பயணச்சீட்டு ரத்து

கொழும்பு, பெப். 20
உத்தியோகபூர்வ கடமைகளின் நிமித்தம் வெளிநாடுகளுக்கு பயணம் மேற்கொள்ளும் அரச உயரதிகாரிகளுக்கு இனி வியாபார வகுப்பு விமான பயணச்சீட்டு வழங்கப்படமாட்டாது என ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.
அண்மையில் ஜெனிவா மனித உரிமைகள் பேரவைக்கு சென்று வந்தவர்களுக்கான விமானப் பயணச்சீட்டு செலவு எட்டு லட்சம் ரூபாவாக மதிப்பிடப்பட்டுள்ளது.
அரசாங்கத்தின் நிதிச் செலவுகளைக் குறைக்கும் திட்டத்தின் கீழ் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளது.
இந்தத் தீர்மானம் ஜனாதிபதி மற்றும் பிரதமரின் செயலாளர் களுக்கு பொருந்துவதுடன் அமைச்சர்களுக்குப் பொருந் தாது என ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது. (ச-6)

### இந்திய விசா

## விண்ணப்ப நிலையத்தின் பணிகள் இன்று ஆரம்பம்

கொழும்பு, பெப். 20
பாதுகாப்புச் சம்பவம் தொடர்பில் மூடப்பட்ட இந்திய விசா விண்ணப்ப நிலையம், இன்று திங்கட்கிழமை முதல் மீண்டும் பணிகளை ஆரம்பிக்கவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
ஏற்கனவே விசா விண்ணப்பங்கள் தொடர்பில் முன்கூட்டிய அனுமதிகளைப் பெற்றுக்கொண்ட வர்கள் புதிய திகதிகளுக்காக 'ஐ.வி.எஸ்.' நிறுவ னத்தை தொடர்புகொள்ளவேண்டும் என்று அறி விக்கப்பட்டுள்ளது. அத்துடன் விசா மற்றும் தூதரக விடயங்கள் தொடர்பில் அவசர தேவைகள் இருப் பவர்கள் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத் தைத் தொடர்புகொள்ள முடியும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. (எ-14-இ)

## மாதாந்தம் 60 மருத்துவர்கள் விடுமுறைக்கு விண்ணப்பிப்பு

ஒவ்வொரு மாதமும் 50 முதல் 60 வரையான மருத்துவர்கள் வெளி நாட்டு வேலைவாய்ப்புக்காக விடு முறைக்கு விண்ணப்பிக்கின்றனர் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பேச்சாளர், மருத்துவ கலாநிதி சம்மில் விஜேசிங்க தெரி வித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரி வித்துள்ளதாவது:-
நாட்டை விட்டு வெளியேறிய மருத்துவ நிபுணர்களின் பட்டியல் சுகாதார அமைச்சகத்தில் இல்லை. எமக்கு கிடைத்த தகவலின்படி கடந்த வருடம் ஆயிரத்துக்கும் அதிகமான மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளி யேறியுள்ளனர். நகர்ப்புறங்களில் உள்ள அரசமருத்துவமனைகள்கூட மருத்துவர்களின் இடம்பெயர்வால் பாதிக்கப்பட்டுள்ளன.
கொழும்பு தேசிய மருத்துவமனை, சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர்களுக்கான மருத்துவமனை மற்றும் மஹரகம அபேக்ஷா மருத்துவமனை போன்ற பிரதான மருத்துவமனைகள் பெரி தும் பாதிக்கப்படவில்லை.
பொருளாதார நெருக்கடி மற்றும் அர சியல் நிச்சயமற்ற தன்மை ஆகியவை மருத்துவர்களை விரட்டுகின்றன. அவர்கள் தங்கள் குழந்தைகளின் எதிர்காலம் பற்றிக் கவலைப்படுகி றார்கள். அதனாலேயே வெளிநாட்டு வேலைவாய்ப்புக்குச் செல்கின்றனர். அத்துடன் தற்போதைய வரி அதிக ரிப்பு மேலும் மருத்துவ நிபுணர்களை வெளியேறச் செய்யும்.
இதேவேளை- செவிலியர்கள் மற்றும் பிற சுகாதார நிபுணர்களும் நாட்டை விட்டு வெளியேறுகின்றனர். பிற மருத் துவமனைகளில் நிறைய மருத்துவ ஆலோசகர்கள் வெளியேறியுள்ள னர் - என்றார். (எ-14-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலைத் தள்ளிவைத்தால் சட்ட நடவடிக்கைக்குத் தயார்!

## சட்டத்தரணிகள் எச்சரிக்கை

**கொழும்பு, பெப்.20**
**உள்ளூராட்சிசபைத் தேர்தல் தொடர்பில், பொறுப்பற்ற முறையில் செயற்பட்டால், அரசியல் அதிகாரங்களும், துறைசார் அரசாங்க அதிகாரிகளும், உயர் நீதிமன்றத்தின் சட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்ள நேரிடும் என தேசிய மக்கள் சக்திக்கான சட்டத்தரணிகள் எச்சரித்துள்ளனர்.**

சட்டத்தரணி சுனில் வட்டகல நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்தி வைக்கும் நடவடிக்கைகளின் பின்னணியில், அமைச்சர்கள், அமைச்சரவை, அரசியல் அதிகாரம் மற்றும் ஐந்து அரசாங்க அதிகாரிகளும் உள்ளனர். அரசியல் அதிகாரத்தால் எடுக்கப்படும் ஒத்திவைப்புத் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு, பொலிஸ்மா அதிபர், திறைசேரி செயலாளர், சட்டமா அதிபர், அரச அச்சகர் மற்றும் ஊடக அமைச்சின் செயலாளர் ஆகிய ஐந்து அரச அதிகாரிகளே பொறுப்பானவர்கள்.

அண்மையில் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பான தீர்ப்பின் போது, பொதுமக்கள் மீதான தங்கள் பொறுப்பை நிறைவேற்றத் தவறிய அரசியல் அதிகாரம் மற்றும் அரசாங்க அதிகாரிகள்மீது உயர்நீதிமன்றம் சிறந்த தீர்ப்பை வழங்கியது.

இந்த உயர்நீதிமன்றத் தீர்ப்பு, உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைத்தற்குக் காரணமானவர்களுக்கும் பொருந்தும். தேர்தலை சீர்குலைக்கும் நடவடிக்கைகள் கடுமையான குற்றமாகும் - என்றார். (எ-இ)

## இலங்கையிலிருந்து ஜேர்மனிய நிறுவனங்கள் வெளியேறலாமென எச்சரிக்கை

கொழும்பு, பெப்.20
இலங்கை இறக்குமதித் தடையை தொடர்ந்தால் இலங்கையிலிருந்து ஜேர்மனியைச் சேர்ந்த நிறுவனங்கள் வெளியேற வேண்டியிருக்கும் என இலங்கைக்கான ஜேர்மனியின் தூதுவர் ஹொல்ஹெர் சியுபோட் எச்சரித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இறக்குமதித் தடை தொடர்பில் ஜேர்மனியை சேர்ந்த நிறுவனங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன. இலங்கை மேலும் இரண்டு வருடங்களுக்கு இறக்குமதி தடையைத் தொடர்ந்தால் ஜேர்மனியைச் சேர்ந்த பல நிறுவனங்கள் இலங்கையிலிருந்து வெளியேறும் நிலையேற்படலாம் - என்றார். (எ-இ)



## நாட்டுக்கு கடத்தப்படவிருந்த போதை இலைப் பொதிகள் நீர்கொழும்பு கடலில் மீட்பு

கொழும்பு, பெப்.20
இலங்கைக்கு கடத்தப்படவிருந்த போதையை ஏற்படுத்தும் கெண்டை இலைகள் அடங்கிய பொதிகள் கடலில் தத்தளித்த நிலையில் மீட்கப்பட்டுள்ளன என கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

நீர்கொழும்பு - களனி பெருந்தோட்ட கடற் பகுதியில் நேற்றுமுன்தினம் கடற்படையினர் மேற்கொண்ட விசேட சோதனையின்போது இந்தப் பொதிகள் கைப்பற்றப்பட்டன.

அந்தப் பொதிகளிலிருந்து சுமார் 535 கிலோகிராம் எடையுள்ள போதையை ஏற்படுத்தும் கெண்டை இலைகள் மீட்கப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடத்தல்காரர்களால் குறித்த பொதிகள் கடற்பரப்பில் விட்டுச் செல்லப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. மீட்கப்பட்ட பொதிகள் சட்டநடவடிக்கைகளுக்காக கட்டுநாயக்கா விலுள்ள சுங்கத் தடுப்பு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன எனக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர். (ச-213)

## மஹிந்தவை பிரதமராக்க திரைமறைவு முயற்சி!

கொழும்பு, பெப். 20
முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்சவை மீண்டும் பிரதமர் பதவிக்கு நியமிக்கும் நடவடிக்கைகளை சிறிலங்கா பொதுஜன பெரமுன தீவிரமாக முன்னெடுத்து வருகின்றது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதி பதவியோ அல்லது பிரதமர் பதவியோ இல்லாமல் தேர்தல் நடத்தப்பட்டால் சிறிலங்கா பொதுஜன பெரமுன மிகவும் ஆபத்தான நிலையைச் சந்திக்க நேரிடும் என்பதை பெரமுனக் கட்சியின் தலைவர்கள் உணர்ந்துள்ளமையே இதற்குக் காரணம் எனவும் கூறப்படுகின்றது.

தற்போதைய அரசியல் நெருக்கடியை ஓரளவுக்குத் தணிக்க, பொதுஜன பெரமுனவுக்கு அரசாங்கத்தில் உயர் பதவி கிடைக்கவேண்டும் என பஸில் உள்ளிட்டோர் கருதுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கு முக்கியமான தடையாக காணப்படும் தற்போதைய பிரதமர் தினேஷ் குணவர்த்தன அரசாங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர் என்பதனால், அவ்வாறானதொரு பிரேரணையை அவருக்குத் திடீரென முன்வைக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் கடந்த வாரம் ராஜபக்ச குடும்பத்தினர் உத்தியோகபூர்வமற்ற முறையில் இந்தத் தகவலை அவருக்கு வழங்க ஏற்பாடு செய்திருந்ததாகவும் பிரதமராகப் பதவியேற்க மஹிந்தவுக்கு மேலும் ஒரு சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

இருப்பினும், பிரதமர் தினேஷ் குணவர்த்தன தரப்பிலிருந்து இதுவரை பதில் வரவில்லை. தொடர்ச்சியாக பஸில் இது தொடர்பில் அவருக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றனர் என்று தகவல் வெளியாகியுள்ளது. (எ-14,இ)

## பௌத்தாலோக வீட்டிலும் கோத்தாபயவுக்கு சிக்கல்

கொழும்பு, பெப். 20
முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தங்கியிருந்த பௌத்தாலோக பகுதியிலுள்ள வீட்டிலும் பல சிக்கல் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, ஜனாதிபதியாக இருந்த காலம் முதல் நடந்த போராட்டத்தின் காரணமாக நாட்டை விட்டு வெளியேறி இலங்கைக்குத் திரும்பிய அவர் தங்குவதற்கு கொழும்பு பௌத்தாலோக மாவத்தை பிரதான வீதிக்கு முன்பாக கட்டப்பட்ட உத்தியோகபூர்வ இல்லமொன்று வழங்கப்பட்டது.

ஆனால், சில நாள்களுக்குப் பிறகு, தொடர்ந்து வாகனங்களின் சத்தமும், அவற்றின் ஹோன்களும் ஒலித்ததால், கோத்தாபயவுக்கு அந்த வீட்டில் வசிப்பது பெரும் பிரச்சினையாக மாறியுள்ளது.

இதன்காரணமாக இந்த உத்தியோகபூர்வ இல்லத்துக்குப் பதிலாக வேறு உத்தியோகபூர்வ இல்லத்தை வழங்கவேண்டும் என்று கோத்தாபய பல சந்தர்ப்பங்களில் அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளார்.


முன்னாள் ஜனாதிபதி மஹிந்த தங்கியிருந்த விஜேராம மாவத்தையில் உள்ள உத்தியோகபூர்வ இல்லத்துக்குக் குடியேறியுள்ளார்.

இதனால் அவர் இதுவரை தங்கியிருந்த புல்லர்ஸ் வீதியிலுள்ள உத்தியோகபூர்வ இல்லத்துக்குச் செல்ல கோத்தாபய தீர்மானித்துள்ளார்.

எனினும் பல்வேறு காரணங்களால் அந்த உத்தியோகபூர்வ இல்லத்தில் தங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளமையால், அவருக்குப் பழக்கமான மீரிஹானையில் அமைந்துள்ள வீட்டில் அமைதியான சூழலில் தங்க கோத்தாபய முடிவெடுத்துள்ளார் எனக் கூறப்படுகின்றது. (எ-14,இ)

## சட்டவிரோதமாகச் செயற்பட நாம் ராஜபக்சக்கள் அல்லர்

### சஜித் பிரேமதாஸ காட்டம்



கொழும்பு, பெப். 20
சட்டவிரோதமான வேலைகளைச் செய்வதற்கு நாங்கள் ராஜபக்சக்கள் அல்லர். உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்குப் பின்னர் மீண்டும் மக்கள் சேவையை ஆரம்பிப்போம்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். ஹக்மன பிரதேசத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;
நாடாளுமன்றத்தில் ஆளும்கட்சியை விடுத்து ஏனைய கட்சிகள் ஆட்சியில் இல்லாதபோது மக்களுக்கு எதையும் செய்யவில்லை.

ஆனால், ஐக்கிய மக்கள் சக்தி கடந்த 3 ஆண்டு காலத்தில் எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு மூச்சு மற்றும் பிரபஞ்சம் போன்ற வேலைத்திட்டங்கள் மூலம் மக்களுக்குப் பெரும் சேவையை செய்துள்ளது.

தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள ஒரு தருணத்தில், தேர்தல் சட்டத்தை மதித்து பாடசாலைகளுக்கு பஸ் வழங்கும் திட்டம் நிறுத்தப்பட்டுள்ளது. ராஜபக்சக்கள் உள்ளிட்டோர் செய்த ஊழல் மோசடிகளால் நாடு பெரும் நெருக்கடிகளைச் சந்தித்துள்ளது. இவ்வாறு ராஜபக்சக்களைப் போன்று சட்டவிரோதமான ஒன்றைச் செய்வதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயாராக இல்லை. தேர்தலின் பின்னர் மீண்டும் பாடசாலை பஸ் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்படும். அத்துடன் மக்களுக்கான சேவைகளும் தொடரும்- என்றார். (எ-14,இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 35ஆவது அகவை நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில்
20.02.1988

கந்தன் அடியில்
26.06.2021

## அமரர் கிருபாமூர்த்தி சிந்துஜன்





குறையில்லா பண்போடும்
வரையறையில்லா அன்போடும்
கறையில்லா குணத்தோடும்
கரையில்லா கனவுகளோடும்
நிறைவாக நீ வாழ்ந்த வாழ்வை
அரை வழியில் காலனவன் கவர்ந்து விடவே
அரனடியில் சரண் புகுந்தாயே!

சிந்து! நீ சிந்திச் சென்ற சிரிப்பூக்கள்
சிறப்புற எம் சிந்தையுள்ளேயே சிதறிக்கிடக்கிறது
சிறப்பான உன் பிறந்த நாளில்
சீர் பெற்று நீ வாழ்ந்த வாழ்வினை – எம்
சிரம் மேலேந்தி சிரம் தாழ்த்தி வணங்குகிறோம்!
தினம் தினம் பிறக்கட்டும் உன் பிறந்த நாள்
தினந்தோறும் உன் இறவாத நினைவுகளோடு
சுவைக்கட்டும் எம்முலகம்!.

"அக்கா அகம்"
சிந்துஜன் ஒழுங்கை,
கே.கே.எஸ். வீதி, இணுவில்.

என்றும் உன் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

பிறப்பு
10.01.1947



இறப்பு
19.02.2023

## திருமதி மகேஸ்வரி செல்வரட்ணம்

நயினாதீவை பிறப்பிடமாகவும், கனடா, விஸ்வமடு, யாழ். பிறவுண் வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி செல்வரட்ணம் நேற்று (19.02.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - விசாலாட்சி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகரட்ணம் - சின்னத்தங்கச்சி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்வரட்ணத்தின் அன்பு மனைவியும், மாங்களேஸ்வரி, காலஞ்சென்றவர்களான மோகனாம்பிகை, தணிகாசலம், மற்றும் கனகாம்பிகை, காலஞ்சென்ற திவாகரன் (Eestee Rest) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சிவசுப்பிரமணியம், ஜெகநாதன், ஸ்ரீரஞ்சினி ஆகியோரின் மைத்துனியும் செல்வரூபன் (கனடா), காந்தரூபன் (France) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பவானி, சுஜதா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கீரத்தனா - தினேஷ், வைஷ்ணவி, அபிரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.02.2023) செவ்வாய்க்கிழமை இல.38, அரசடி வீதி, புகையிரத கிழக்கு ஒழுங்கை கந்தர்மடம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நயினாதீவு சல்லிபரவை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

38, அரசடி வீதி,
புகையிரத கிழக்கு ஒழுங்கை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தகவல் :
மகன்
077 560 2104

(CS 23574) (3/6)

# இன்றைய நாள்

## (ராசிபலன்)

**மேடம்:** காரிய அனுகூலமான நாள். புதிய முயற்சிகளை மேற்கொள்வதற்கு உகந்த நாள் செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். சிலருக்கு பிள்ளைகள் மூல மும் பணவரவுக்குவாய்ப்பு உண்டு. செலவுகள் ஏற்படும். வீண் விவாதம் செய்வதைத் தவிர்ப்பது நல்லது.

**மிதுனம்:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். சோர்வு உண்டாகலாம். இணக்கமாக நடந்து கொள்ளவும். வீண் செலவுகள் ஏற்படும்.

**கடகம்:** உறவுகளால் சங்கடம் ஏற்படக்கூடும். உடல் ஆரோக் கியத்தில் கவனம் தேவை. சகோதரர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பொறுப்புகளை உற்சாகமாக நிறைவேற்றுவீர்கள்.

**சிம்மம்:** அதிர்ஷ்டகரமான நாள். நீங்கள் எடுக்கும் புதிய முயற்சி வெற்றிகரமாக நிறைவேறும். தொடங்கிய காரியங்கள் அனுகூலமாக முடியும். பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**கன்னி:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**துலாம்:** உற்சாகமான நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். முக்கியமான முடிவுகள் எதையும் இன்று எடுக்கவேண்டாம். உடல் நலனில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். எதிர்பார்க்கும் காரியம் முடிவதில் தாமதம் உண்டாகும். பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

**தனுசு:** செலவுகள் அதிகரிக்கும். குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்யச் செலவு செய்ய வேண்டிவரும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும்.

**மகரம்:** புதிய முயற்சிகளை தொடங்குவது சாதகமாக முடியும். உடல்நலனில் கவனம் தேவை. சிலருக்கு சிறிய அளவில் ஆரோக்கியக்குறைவு ஏற்பட்டு சரியாகும்.

**கும்பம்:** பொறுமையுடன் இருக்க வேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும். பல முறை யோசித்து எடுப்பது நல்லது. தட்டிக்கொடுத்து வேலை வாங்கவும்.

**மீனம்:** கருத்துவேற்றுமை நீங்கும். மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். காரியங்களில் வெற்றி உண்டாகும். புதிய முயற்சிகளை தொடங்குவது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிக்குகள் ஓய்வதில்லை!

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்கு எதிராகவும் அந்தத் திருத்தம் அரசமைப்பில் இருந்து நீக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியும் பௌத்த மகா சங்கத்தினர் பெரும் போராட்டங்களை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளனர். 13 ஆவது திருத்தத்தின் நகலைத் தீயிட்டு எரித்தமையில் ஒரேயொரு வேட்டுத்தான் தீர்க்கப்பட்டது. அதன் தொடர்ச்சியான வேட்டுக்கள் இனித்தான் தீர்க்கப்படும். இதனை முன்னிட்டு, மிகிந்தலையில் பிரமாண்டமான போராட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது' என்று 13ஆவது திருத்தத்தைக் கடுமையாக எதிர்க்கின்ற நாட்டின் முதன்மைப் பௌத்த பீடங்களுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

13 ஆவது திருத்தம் என்பது தமிழர்களின் 70 ஆண்டுகாலப் போராட்டங்களுக்கும், நீறுபூத்த நெருப்பாகக் கனன்று கொண்டிருக்கும் அரசியல் பிரச்சினைகளுக்குமான இறுதித் தீர்வு அல்ல. 13 ஆவது திருத்தத்தை தமிழர்கள் தமது தீர்வாக இதுநாள் வரையில் ஏற்றுக்கொள்ளவில்லை. தமது பிரச்சினைகளுக்கான தீர்வாக மட்டுமல்ல தீர்வின் ஆரம்பப்புள்ளியாகக்கூட '13' இனை ஏற்றுக்கொள்வதற்குத் தமிழர்கள் தயாரில்லை. ஆகவே '13' ஐ நிராகரித்து, சமஷ்டித் தீர்வு கோரிப் போராட வேண்டியது தமிழர்கள்தான். ஆனாலும் சுயநலமான தமிழ் அரசியல்வாதிகள் தமது வாக்குவங்கியை நிரப்புவதில் மட்டுமே குறியாக இருப்பதால், மக்களை ஒன்று திரட்டி அரசியல்தீர்வு .கோரிப் போராடும் நிலை இப்போதில்லை. தமிழ் மக்களை அரசியல்வாதிகள் கைவிட்டபோதும், பிக்குகள் கைவிடுவதாக இல்லை. அதனால்தான் தமது 'ஆன்மிக' வேலைகளையெல்லாம் மூடைகட்டி வைத்துவிட்டு, '13' ஐ எதிர்த்து போராடக்கிளம்பியிருக்கிறார்கள். எனவே அந்தத் தேரர்களுக்கு தமிழர்கள் கோடிமுறை நன்றி சொன்னாலும் தகும். ஆனாலும், தேரர்கள் '13' என்றாலே பேயைக் கண்டது போல அலறியடித்து, வீதிக்கு போராட வருவது ஏன் என்று தெளிதலும் இங்கு அவசியம்.

"13 ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டால் தமிழர்களுக்குக் காணி, பொலிஸ் அதிகாரங்கள் பகிரப்படும். அவ்வாறு காணி, பொலிஸ் அதிகாரங்கள் பகிரப்பட்டால் நாடு துண்டாடப்படுவதற்கு ஏதுவான அனைத்து வாய்ப்புக்களையும் ஏற்படுத்தும்" என்பதுதான் இந்தப் போராட்டங்களுக்கெல்லாம் சொல்லப்படும் காரணம். தமிழர்களின் கோரிக்கை சமஷ்டி என்பதாக இருக்கையில், காணி, பொலிஸ் அதிகாரங்களை உள்ளடக்கிய ஒரு தீர்வுப்பொதியைத் தருவதுகூட பிக்குகளுக்கு குடைச்சலாக இருக்கின்றது. இப்படி போகிற போக்கில் கிள்ளித் தெளிக்கும் அதிகாரங்களைப் பகிரும் 13 ஆம் திருத்தத்தையே ஜீரணிக்க முடியாத பிக்குகள், சமஷ்டியையோ அல்லது மத்திய அரசால் கட்டுப்படுத்தவும் திரும்பப்பெற முடியாததுமான அதிகாரங்களையோ தமிழர்களுக்கு வழங்க முடிவெடுத்தால் நாட்டைச்சுடுகாடாக்கி விட்டுத்தான் ஓய்வார்கள் போலும். தமிழர்களுக்கு எந்தவொரு நன்மை கிடைத்தாலும் அதற்கு எதிராகப் போராடுவதென்பது பிக்குகளின் பிறவிக்குணம்.

13 ஆவது திருத்தத்தை இப்போது வீதிக்கு இறங்கி எரிக்கும் இந்தக் காவிகள், அந்தத் திருத்தம் கொண்டுவரப்படாமலேயே தடுத்திருக்கலாமே? இப்போது கூட அவர்கள் தமக்கு இசைவான அரசியல்வாதிகள் மூலம் நாடாளுமன்றத்தில் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து அரசமைப்பிலிருந்து '13' ஐ முற்றாக நீக்கலாம்தானே? ஆனால், அப்படி அவர்கள் செய்யமாட்டார்கள். தமிழர்களுக்கு அதிகாரங்கள் பகிரப்படப்போகின்றன என்று போராட்டத்தை மேற்கொள்ளும் தேரர்கள், 13 ஆவது திருத்தத்தை அரசமைப்பிலிருந்து முற்றாக நீக்குங்கள். அதை அரசமைப்பில் இருந்து இல்லாமற் செய்வதற்குத் தேவையான முன்மொழிவைக் கொண்டுவாருங்கள்' என்று ஏன் இதுநாள்வரையில் போராடவில்லை? இந்தியாவைப் பகைக்காத வகையிலான இராஜதந்திர நடவடிக்கைகளையும் உறவுகளையும் குலைக்காத வகையிலான எதிர்ப்பொன்றுதான் இது விடயத்தில் தேவை என்ற புரிதலுடன்தான் இந்தப் போராட்டங்கள் நடத்தப்படுகின்றன. இதன்பின்னால் கண்ணுக்குத் தெரியாத பல நுண்ணரசியல்களும் உள்ளடங்கியிருக்கின்றன.

13 ஆவது திருத்தத்தை எதிர்க்கும் முதுகெலும்புத்தனம் உங்களுக்கு(தேரர்களுக்கு) இருக்கின்றது எனில் அதை முற்றாக எதிர்த்து நில்லுங்கள். முடிந்தால் அதை அரசமைப்பிலிருந்து தூக்கிக்கடாசுங்கள். அப்போதுதான் தமிழர்களுக்கு '13' ஐக் கூட சிங்களப் பேரினவாதமும், பௌத்தமும் வழங்கப்போவதில்லை என்பது இன்னொருமுறை உலகுக்கு முன்னால் அம்பலமாகும்.

நாளொரு நல்வார்த்தை

உங்களால் நம்பிக்கையுடன் கனவு காண முடியும் என்றால், கனவில் கண்டதை நிஜத்திலும் செயற்படுத்தி செய்து முடிக்க முடியும்.

- பில்கேட்ஸ்



# தேர்தலை ஒத்திவைத்தாலும் வேட்புமனு செல்லுபடியாகும்

## தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

கொழும்பு, பெப்.20

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை உரிய தினத்தில் நடத்த முடியாமற்போனால், ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்புமனுக்கள், வாக்களிப்பு இடம்பெறும் வரையில் செல்லுபடியாகும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.




2020ஆம் ஆண்டு கொரோனா பரவல் காலத்தில், பொதுத் தேர்தலுக்கு வேட்பு மனு கோரப்பட்டிருந்த போதிலும், வாக்களிப்பு பிற்போடப்பட்டபோது கோரப்பட்ட வேட்பு மனுக்களுக்கே பொதுத்தேர்தல் நடத்தப்பட்டது என்று தேர்தல் ஆணைக்குழுவின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நிதி இல்லாததால், உள்ளூராட்சிமன்றத் தேர்தலை உறுதியளித்தவாறு நடத்த முடியாமற்போகும் நிலை ஏற்படும் என மனு ஒன்றின் மூலம் உயர்நீதிமன்றத்துக்கு அறியப்படுத்தப்படவுள்ளது என்று தேர்தல் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை உரியவாறு நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேர்தல் ஆணைக்குழு உயர்நீதிமன்றத்தில் கடந்த 10ஆம் திகதி உறுதி வழங்கியிருந்தது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்க, தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று கோரி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தாக்கல் செய்த இரண்டு மனுக்கள் மீதான விசாரணையின்போதே இந்த உறுதி வழங்கப்பட்டது.

அந்த உறுதிமொழிக்கு அமைய நடவடிக்கை எடுப்பதற்கு இதுவரையில் நிதி கிடைக்கவில்லை என மனு ஒன்றின் மூலம் உயர் நீதிமன்றத்துக்கு தெளிவுபடுத்த தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இதேவேளை- உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக 10 மாவட்டங்களுக்கான வாக்குச்சீட்டுகள் ஏற்கனவே அச்சிடப்பட்டுள்ளன என்று அரச அச்சகத் திணைக்களத்தின் தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

ஆனால், மறைகரங்களின் காரணமாக, அச்சிடல் பணிகளின் முன்னேற்றம் மந்தமாக உள்ளது என்று அந்த தொழிற்சங்கத்தின் செயலாளர் அசங்க சந்தருவன் தெரிவித்துள்ளார்.

கடந்த 12ஆம் திகதி, உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்குச்சீட்டு அச்சிடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இன்னும் வாக்குச்சீட்டுகள் அச்சிடப்படுகின்றன. வரலாற்றில் வாக்குச்சீட்டு அச்சிட இவ்வளவு காலம் எடுத்ததில்லை.

அச்சிடுவதற்குப் போதுமான பொருள்கள், தேவையான உபகரணங்கள் மற்றும் பயிற்சி பெற்ற பணியாளர்கள் திணைக்களத்திடம் இருக்கின்றனர். தேர்தலை தாமதப்படுத்தும் நோக்கில், வாக்குச்சீட்டு அச்சிடுவதைத் தாமதப்படுத்தும் வகையில், சில சக்திகள் அச்சகத்தின் மீது அழுத்தங்களைப் பிரயோகிப்பது வெளிப்படையானது என்றும் அவர் மேலும் குற்றஞ்சாட்டியுள்ளார். (எ-இ)

**நாளை** 21.02.2023 செவ்வாய்க்கிழமை மாசி 09

சுபநேரம் : 11.01 - 12.31

ராகுகாலம் : 03.31 - 05.01

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நெடுமாறனின் கருத்து

# தமிழ்நாடு அரசாங்கம் தெளிவுபடுத்தவேண்டும்

## இந்திய பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு கோரிக்கை

கொழும்பு, பெப். 20

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் உயிருடன் உள்ளார் என உலகத் தமிழர் பேரவையின் தலைவர் பழ.நெடுமாறன் தெரிவித்த கூற்று தொடர்பில் தமிழ்நாடு தெளிவுபடுத்தவேண்டும்.

இவ்வாறு இந்தியப்பிரதமர் நரேந்திர மோடியிடம் இந்திய பயங்கரவாத எதிர்ப்புப் பிரிவின் தலைவர் மணீந்திர ஜித்சிங் பிட்டா கோரிக்கை விடுத்துள்ளார்.

ஊடகசந்திப்பொன்றை நடத்தி அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

இந்தியப் பிரதமராக இருந்த ராஜீவ்காந்தி கொலைக்குப் பொறுப்பான ஒருவரைப் பற்றி தவறான கற்பிதங்களை அரசியலுக்குப் பயன்படுத்தக்கூடாது.

தமிழ்நாட்டு அரசியல்வாதிகளிடம் பயங்கரவாத சிந்தனைகளில் மாற்றம் இதுவரை ஏற்படவில்லை.

சுயலாப அரசியலுக்காக காலத்துக்குக் காலம் இவ்வாறான வதந்திகளைப் பரப்பி வருகின்றனர்.

இந்தியாவில் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி கடுமையான நடவடிக்கைகளைப் பிரயோகிக்க வேண்டும் - என்றார். (ச-6)

# புனரமைப்பற்ற வீதிகளால் உயிராபத்தில் பொதுமக்கள்

### வழக்குத் தாக்கல் செய்யுமாறு கோரிக்கை

**" சங்கானை - பொன்னாலை வரையான வீதி ஊடாகப் பயணிக்கும் மக்களுக்கும் இந்த வீதியின் அருகே குடியிருப்போருக்கும் வர்த்தகர்களுக்கும் எதிர்காலத்தில் சுவாச நோய்கள் மற்றும் ஏனைய நோய்கள் ஏற்படும் ஆபத்துக்கள் ஏற்பட்டுள்ளன. "**

யாழ்ப்பாணம், பெப். 20

சங்கானை - பொன்னாலை வரையான வீதி, மாவடி - மூளாய் வரையான வீதி ஆகியன நீண்டகாலமாகப் புனரமைப்பின்றிக் காணப்படுவதால் அந்த வீதிகளால் பயணிக்கும் பொதுமக்கள் உயிராபத்தை எதிர்நோக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதற்குக் காரணமான வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்வது தொடர்பில் வலிகாமம் மேற்கு பிரதேசசபையில் ஆராயப்பட்டுள்ளது.

வலிகாமம் மேற்கு பிரதேச சுகாதாரக் குழுக் கூட்டம் தவிசாளர் த.நடனேந்திரன் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

அந்தக் கூட்டத்தில் கருத்து வெளியிட்ட சபை உறுப்பினர் ந.பொன்ராசா,

சங்கானை - பொன்னாலை வரையான வீதி ஊடாகப் பயணிக்கும் மக்களுக்கும் இந்த வீதியின் அருகே குடியிருப்போருக்கும் வர்த்தகர்களுக்கும் எதிர்காலத்தில் சுவாச நோய்கள் மற்றும் ஏனைய நோய்கள் ஏற்படும் ஆபத்துக்கள் ஏற்பட்டுள்ளன.

கடந்த பல மாத காலமாக எமது பிரதேச வீதிகள் கிளறி விடப்பட்டுள்ளன. மாவடி - மூளாய் வீதி மிக மோசமாகச் சேதமடைந்துள்ளது. மக்கள் அடிக்கடி விபத்துக்களில் சிக்கிக் காயமடைந்து வருகின்றனர். பொருளாதார நெருக்கடியைக் காரணம் காட்டி புனரமைப்புப் பணிகள் நிறுத்தப்பட்டாலும் மக்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டியது வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கடமையாகும்.

இதைச் செயற்படுத்தாமல் மக்களின் உயிர்களுடன் விளையாடும் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு எதிராக நேரடியாகவோ அல்லது மனித உரிமைகள் ஆணைக்குழு ஊடாகவோ வழக்குத்தாக்கல் செய்து அவர்களை சட்டத்தின் முன்நிறுத்துங்கள் என்று சுகாதார மருத்துவ அதிகாரியிடம் கோரினார்.

அதற்குப் பதிலளித்த சுகாதார மருத்துவ அதிகாரி, நாங்கள் அவ்வாறு வழக்குத்தாக்கல் செய்ய முடியாது. பிரதேசசபையே அதைச் செய்யவேண்டும் - என்றார்.

அதனையடுத்து, உரிய சட்ட ஏற்பாடுகளை ஆராய்ந்து உடனடியாக வழக்குத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தவிசாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. (ஒ-14.20)

# கொடுப்பனவு மீண்டும் சமுர்த்தி வங்கிகளில்

### *முதியோர் அதிருப்தி*

சாவகச்சேரி, பெப்.20

சமுர்த்திக் கொடுப்பனவுகள் மீண்டும் சமுர்த்தி வங்கிகளில் வழங்கப்படவுள்ளன இதுகுறித்து முதியோர் அதிருப்தியடைந்துள்ளனர்.

70 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு அந்தந்த பிரதேச சமூக சேவை அலகுகள் ஊடாக அருகிலுள்ள அஞ்சல் அலுவலகங்களில் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வந்தன. இதனால் முதியோர் எந்த வித சிரமங்களும் இல்லாமல் அஞ்சல் அலுவலகங்களில் கொடுப்பனவு பெற்றுவந்தனர்.

கடந்த செப்ரெம்பர் மாதம் தொடக்கம் முதியோர் கொடுப்பனவுகள் அந்தந்த சமுர்த்தி வங்கிகள் மூலம் வழங்க முதியோர் தேசிய செயலகத்தால் அறிவிக்கப்பட்டு செப்ரெம்பர், ஒக்ரோபர், நவம்பர் ஆகிய மாதங்களில் வழங்கப்பட்டன. எனினும் கொடுப்பனவுகள் சமுர்த்தி வங்கிகளில் வழங்குவதில் தாமதங்கள் ஏற்பட்டன.

முதியோர் கொடுப்பனவு பெறுவதற்கு நீண்ட தூரம் செல்வதால் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்று திணைக்களத்துக்கு முறையிட்டதையடுத்து கடந்த டிசெம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் சமூக சேவைகள் அலகுகள் ஊடாக மீளவும் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களில் வழங்கப்பட்டு வந்தன.

பெப்ரவரி மாதக் கொடுப்பனவு தொடர்பான தகவல் இதுவரை கிடைக்காத நிலையில் அஞ்சல் அலுவலகங்கள் கொடுப்பனவுப் பட்டியல் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக பிரதேச சமூக சேவைகள் அலகுடன் தொடர்பு கொண்டபோது, எந்தவொரு அறிவித்தலும் இதுவரை கிடைக்கவில்லை. பெப்ரவரி மாதக் கொடுப்பனவு சமுர்த்தி வங்கிகளில் வழங்கப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. இதனால் கொடுப்பனவு பெறுவதற்கு தாம் அலைகின்றனர் என்று முதியோர் தெரிவித்துள்ளனர். (ஒ-14,9)

# ஏ-9 வீதியில் விபத்து சிறுமி பரிதாபச் சாவு!

வவுனியா, பெப். 20

வீதியில் நடந்து சென்ற தாய் மற்றும் மகளை கார் மோதித் தள்ளியதில் சிறுமி உயிரிழந்துள்ளார் என பூனாவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.




இந்த விபத்துச் சம்பவம் ஏ-9 வீதி பூனாவப் பகுதியில் நேற்றுமுன்தினம் நிகழ்ந்துள்ளது.

வீதியில் பயணித்துக் கொண்டிருந்த குறித்த காருக்கு முன்னால் திடீரென நாயொன்று குறுக்கிட்டதால் நாயுடன் மோதிய கார் கட்டுப்பாட்டை இழந்து வீதியில் நடந்து சென்றுகொண்டிருந்த தாய் மற்றும் மகள் மீது மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் அதேபகுதியைச் சேர்ந்த 13 வயதுடைய சிறுமி உயிரிழந்ததுடன் காரின் சாரதி மற்றும் தாயார் இருவரும் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் பூநகரிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-18)

# கோண்டாவில் டிப்போவுக்குள் மத அடையாளம் வேண்டாம்

யாழ்ப்பாணம், பெப். 20

இலங்கை சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க.சச்சிதானந்தன், இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் முதன்மைப் பிராந்திய முகாமையாளர் தர்மசேனனைச் சந்தித்து, டிப்போவுக்குள் மத அடையாளங்களை ஏற்படுத்தும் முயற்சிகளை கைவிடுமாறு கோரியுள்ளார்.

முகாமையாளரிடம் விடுத்த கோரிக்கையில், கோண்டாவில் பேருந்து மனை (டிப்போ) தொடங்கிய காலம் முதலாகப் பல ஆண்டுகளாக இன்று வரை மத அடையாளங்களை எவரும் புகுத்தவில்லை. அண்மையில் மாற்றலாகி வந்திருக்கின்ற கத்தோலிக்கரான மூத்த அதிகாரி ஒருவர் கோண்டாவில் பேருந்து மனைக்குள் அந்தோனியார் சிலை ஒன்றை நிறுவுவதற்கு முயற்சி செய்து பிரதேசசபையிலும் உரிமம் பெற்றுள்ளார்.

சைவ மக்கள் செறிந்து வாழ்கின்ற பூமி கோண்டாவில், அங்கே பிற மத அடையாளங்கள் புகுவதை அவர்கள் விரும்புவதில்லை. சைவத்தில் ஈடுபாடு கொண்டவர்கள் நடுவே அந்தோனியார் சிலையை வைக்க முயலாதீர்கள். பல்லாண்டுகள் ஊடாகப் பேருந்து மனைக்குள் மத அடையாளங்களைப் புகுத்துவதில்லை என்ற கோட்பாட்டையே தொடர்ந்தும் கடைப்பிடியுங்கள்.

சைவர்களின் கருத்தை அறிந்து அதற்கமைய அவர்களுக்கு இடையூறு இன்றி அவர்களுடைய எதிர்ப்பு இன்றி அந்தோனியார் சிலையை வைக்க முடியுமானால் வையுங்கள் என்றே பிரதேசசபை உங்களுக்கு உரிமம் தந்துள்ளது.

மத நல்லிணக்கமும் அமைதியும் எதிர்ப்புணர்வின்றியும் இருந்த இ.போ.ச. ஊழியரிடையேயும் சுற்றி வாழ்கின்ற மக்களிடையேயும் அருவருக்கத்தக்க மதவெறுப்பையும் மதவாதத்தையும் தூண்டுவதைச் சிவசேனை ஒருபொழுதும் ஒப்புக் கொள்ளாது. கத்தோலிக்க கிறிஸ்தவ மத பரப்புநர்கள் அண்மைக்காலமாக முன்னெடுக்கின்ற மதம் மாற்றும் வழிமுறைகளில் ஒன்றே அந்தோனியார் சிலையின் வைப்பு என்பதைச் சிவசேனை சுட்டிக்காட்டியது.

சைவ மக்களின் எதிர்ப்பையும் உணர்வையும் மீறி அந்தோனியார் சிலை பேருந்து பணிமனைக்குள் அமையுமாயின் கடுமையான போராட்டம் நடைபெறும் என்பதை மறவன்புலவு க.சச்சிதானந்தன் முதன்மை பிரதி முகாமையாளரிடம் எடுத்துக் கூறினார். (ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஹோற்சவம்

கொடிகாமம். பெப் .20 தென்மராட்சி, வரணி -மாசேரி திருவருள் மிகு புராதன குருநாதர் கோவில் அலங்காரத் திருவிழா எதிர்வரும் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் மஹோற்சவம் நடைபெறவுள்ளது.

(ய-159)


விநியோகஸ்தர்கள்

# தேவை

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி

AJ MASALA

மிக வேகமாக வளர்ச்சியடைந்து வரும் எமது மசாலா உற்பத்தி நிறுவனமானது தற்போது யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கு புதிய விநியோகஸ்தர்களை எதிர்பார்க்கிறது.





தகைமைகள்

- வங்கி உத்தரவாதம் 1 மில்லியன்.
- சொந்த வாகனம் / போக்குவரத்து வசதி கொண்டிருத்தல்

- 7% விநியோகஸ்தர் மார்ஜின்
- பண கொள்வனவிற்கு மேலதிக 2%
- கம்பெனி விற்பனை பிரதிநிதி

More Info Call Us:
0777 32 55 33 / 077 798 9163


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 08.09.1955

மறைவு 02.03.2022

### அமரர் பொன்னுத்துரை சிறீகரன்

(முன்னாள் ஓய்வுபெற்ற உப அதிபர், சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்)

திதி : மாசி அமாவாசை

மனிதருள் மாணிக்கமாய் திகழ்ந்திடவே
மண்ணில் வந்து அவதரித்தீர்கள்
செம்மையான வாழ்வுதனை வாழ்வாங்கு வாழ்ந்தீர்கள்
கண்மூடித் திறப்பதற்குள் காலனிடம் சரணடைந்தீர்கள்
உள்ளமது ஏற்குதே இல்லை உங்கள் இழப்பை
இன்றுடன் ஓராண்டு கரைந்தோடியதே
சொர்க்கம் தனை வேறின்றி புகலிடம் உயிர் அடையாதிருக்க
பரம்பொருள் பாதம் பணிகின்றோம்
வாழ்வியல் ஆசானாய் உங்கள் அடியொற்றியே
எம் மீதி வாழ்வு அமைந்திடுமே
மேலிருந்தும் கண்பார்வையது
மண்ணில் எம்மோடிருக்க வேண்டி நிற்கின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!


"விஜயாபதி"
கல்லூரி ஒழுங்கை,
மானிப்பாய்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(CS 23554 ) (3/6)

## ஈரவிழிகளுடன் நான்காமாண்டு நினைவலைகள்

அன்னை மடியில்
23 . 04 . 1940



வேரக்கேணியான் அடியில்
06 . 03 . 2019

### அமரர் பேரம்பலம் நடேசபிள்ளை

அன்பிற்கு இலக்கணமாய் அவனியில் வாழ்ந்து
பண்புடமை காத்து பக்குவமாய் வழி நடந்தீர்
இரக்கத்தின் இருப்பிடமாய் ஈகை பல செய்து
எல்லோருக்கும் நல்லவராய் நாணயமாய் நடந்தீர்
துன்புற்றோர் துயர்துடைத்து துணைக்கரமாய்
அடைக்கலம் தந்த உம்மை கந்தனவன் ஏனழைத்தானோ!
என் செய்வோம் நாம் கந்தனின் சித்தம் இது
மீண்டும் பிறப்பெடுத்து எம்மிடமே வாருமப்பா....

"நாகபவனம்"
மட்டுவில் மத்தி, சாவகச்சேரி.

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்
குடும்பத்தினர்

(CS 49166) (3/6)

## மரண அறிவித்தல்

தோற்றம்
10 - 06 - 1929



மறைவு
16 - 02 - 2023

### மேரி மக்டலின் யோசப்(புஸ்பம்)

மேரி மக்டலின் யோசப்(புஸ்பம்) கடந்த (16.02.2023) வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அகஸ்ரஸ் சவரிமுத்து-அன்னம்மாவின் மகளும்,காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை யோசேப்பின் மனைவியும், காலஞ்சென்றவர்களான மேரி திரேசா அந்தோனிப்பிள்ளை, பிரான்சிஸ் சேவியர் அகஸ்ரின்(UK), மேரி குயின் விக்ரோரியாவினதும் மற்றும் சவரிமுத்து பிலிப்(UK), சவரிமுத்து மரியதாஸ்(UK) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற விக்ரர் யோசப் மற்றும் றஞ்சினி, றெஜினா(இந்தியா), பாகுதேவன்(இந்தியா), மரீனா(இந்தியா), அருட் சகோதரர் டொமினிக் சாவியோ, சேவியர்(கனடா), நவீனன் (France), சத்தியசீலன் ஆகியோரின் அன்புத் தாயாருமாவார். மேலுமிவர்களுடன் 14 பேரப்பிள்ளைகளுடனும், 5 பூட்டப் பிள்ளைகளுடனும் வாழ்ந்து (16.02.2023) அன்று காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகளுக்காக இன்று (20.02.2023) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து இளவாலை புனித அன்னம்மாள் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் புனித அன்னம்மாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


றஞ்சினி-077 202 8149
சாரங்கவாணி-077 821 4177

தகவல்
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும், விஞ்ஞான பீட முன்னாள் பீடாதிபதியும், கணித புள்ளிவிபரவியற்துறை முன்னாள் தலைவரும் பேராசிரியருமான

### இரட்ணம் விக்னேஸ்வரன்



அவர்கள் 17.02.2023
இறைபதம் அடைந்தமையிட்டு
அவரது குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்வதுடன்
அன்னாரது ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

உங்கள் பிரிவால் துயருறும்
ஊழியர்கள்
கணித புள்ளிவிபரவிற்றுறை, விஞ்ஞான பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறைமுக நகரமென்பது ஒரு வெள்ளையானையே!

கொழும்பு, பெப். 20 கடனைத் திருப்பிச் செலுத்தமுடியா மல் கொழும்பு துறைமுக நகரமும் சீனாவுக்குக் குத்தகைக்கு விடப்படும் என்று ஆய்வாளர் பிரியங்கி ஜய சிங்க அல்ஜசீரா செய்திச் சேவைக் குத் தெரிவித்துள்ளார். அம்பாந் தோட்டை சர்வதேச துறைமுகம் 2017ஆம் ஆண்டு கடனைத் திருப் பிச் செலுத்தமுடியாமல் சீன அரசுக் குச் சொந்தமான நிறுவன மொன் றுக்கு குத்தகைக்கு விடப்பட் டது. அதுபோன்றுதான் கொழும்பு துறை முக நகரமும் தற்போது உள்ளது. இந்தத் துறைமுக நகரம் இலங் கையின் பொருளாதாரத்துக்கு மிகச்சிறிய நன்மையையே ஏற் படுத் தும்.

நாட்டின் பிற பகுதிகளில் உள்ள மக்கள் பொருளாதார நெருக்க டியை எதிர்கொண்டு அதிக வரிச்சு மைகளை சகித்துக் கொண்டு இருக் கும்போது துறைமுக நகரம் தனி யான வரியில்லா கனவுலகமாக மாறியுள்ளது என ஆய்வாளர் பிரியங்கி ஜயசிங்க மேலும் சுட்டிக் காட்டியுள் ளார். (ம)

## கோண்டாவில் வீதியில் பசுக்கன்றின் தலை



யாழ்ப்பாணம், பெப். 20 கோண்டாவில் முத் தட்டு மட வீதியில் பசுக்கன்றின் தலை மற்றும் இதர பகுதிகள் நேற்று முன்தினம் வீசப்பட் டுக் காணப்பட்டன. இது தொடர்பில் கோப்பாய் பொலிஸ் மற்றும் பிரதேசச பையினரின் கவ னத்துக்குக் கொண்டு செல்லப் பட்டதைத்தொ டர்ந்து கோப்பாய் பொலிஸார் சம்பவ இடத்துக்குச்சென்று விசாரணை களை மேற்கொண்டனர். அதன்பின்னர் நல் லூர் பிரதேசசபை யின் கழிவகற்றல் வாகனம் மூலம் பசுக்கன்றின் பகுதி கள் அப்புறப்படுத் தப்பட்டன. (ஒ-14,20)


HOTEL VACANCY
1. Waiters
2. Receptionist
076 419 2934


## நினைவழியா நான்காம் ஆண்டு



மண்ணகம் 12.04.1938 இறைவனடிடம் 06.03.2019

அமரர் வைத்திய கலாநிதி
### நடராஜா சிவராஜா

திதி : அபரபக்க அமாவாசை

கண்ணுக்குள் மணியாய்,
நெஞ்சத்துள் நினைவாய்
என்றும் எங்களுடன் இருப்பீர்கள்
உங்கள் ஆன்மா இறைவனடியில்
சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.

47/3, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

மலை அரசி சிவராஜா
மற்றும் குடும்பத்தினர்

(CS 23548) (3/6)

## மரண அறிவித்தல்

### தியாகேஸ்வரி நவரத்தினம்

பிறப்பு:21.07.1942 இறப்பு:18.02.2023



அம்மன் கோவிலடி சங்கானை கிழக்கைச் சேர்ந்த தியாகேஸ்வரி நவரத்தினம் நேற்றுமுன்தினம் (18.02.2023) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி முத்தம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான தம்பிப்பிள்ளை வள்ளியம்மை தம்பதி யரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நவரத்தினம் அவர்களின் பாசமிகு மனைவியும், கார்த்திகா (சுவிஸ்), Dr.பிரதாபன் (வைத்தியர், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை), பிரகலாதன் ஆகியோரின் பாசமிகு் தாயாரும், பகீரதன் (சுவிஸ்), Dr.நிஷா (வைத்தியர், யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு மாமியும், அபிஜா, அஞ்ஜனா, அஷ்விகா, ஆதேஷ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான விநாயகமூர்த்தி, பாலசுப்பிர மணியம், சோமசுந்தரம், பஞ்சரத்தினம், சண்முகரத்தினம் மற்றும் சிவசுந்தரம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.02.2023) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கரச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.

அம்மன் கோவிலடி,
சங்கானை கிழக்கு, சங்கானை.

077 349 8136
0777939301

(CS 23567) 1-6

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 27 • 12 • 1947

இறப்பு 02 • 03 • 2022

### அமரர் காசிப்பிள்ளை பரமானந்தம்

(உரிமையாளர் காசிப்பிள்ளை அன் சன்ஸ்,
லக்சுமி டிஜிற்றல் கலர் லாப்)

திதி: வளர்பிறை அமாவாசை

ஆற்றுப்படுத்த ஆருமின்றி ஆறாத்துயரில்
எம்மை ஆழ்த்தி மண்ணுலக வாழ்வு
போதும் என்று எண்ணி விண்ணுலக வாழ்வை
தேடிச் சென்று - ஆறிரண்டு திங்கள் கடந்தாலும்
நீங்கள் இல்லா வெற்றிடத்தை நிரப்ப
உறுதுணையாய் இருப்பது
உங்கள் நினைவுகள் மட்டுமே
அன்புக்கும் பண்புக்கும் உறைவிடமாகிய
எமது குடும்ப விளக்கின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அராலி வீதி,
சங்கானை.

குடும்பத்தினர்.

(CS 23579) 1-6

## மரண அறிவித்தல்

### மாணிக்கம் நவரத்தினம் (குணம்)

(787 மாதகல் - யாழ், செல்வா பஸ் உரிமையாளர்)

பிறப்பு 30.08.1954 இறப்பு 17.02.2023



சங்கானை ஆஸ்பத்திரி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் நவரத்தினம் (குணம்) கடந்த (17.02.2023) வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் பொன்னம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை செல்லமா தம்பதியரின் பாச மிகு மருமகனும், செல்வநாயகி (சின்னப் பிள்ளை) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சின்னையா, சரஸ்வதி, பாலசிங்கம் (SPN), பாலு, இராசம்மா மற்றும் இராசத்தினம் (M.R.S) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், தவச்செல்வம் (லண்டன்), செல்வகுமார், (செல்வா - ஜேர்மனி), குமுதினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், தயந்தினி (லண்டன்), தவக்குமார் (ஜேர்மனி) ஆகியோரின் பாசம் நிறைந்த மாமனாரும், சரன்ஜன், ஆருக்ஷன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (20.02.2023) திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(cs.23571) (2.6)

தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வடக்கு மீனவரின் கட்டமைப்பை வலுப்படுத்த அறிஞர்கள் குழாம்

### ஊர்காவற்றுறை கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 20

வட பகுதியைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கும் கடற்றொழிலாளர் கட்டமைப்பை வலுப்படுத்தவும் அறிஞர்கள் குழாமொன்று உருவாக்கப்பட்டுள்ளது என்று ஊர்காவற்றுறை கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் அ.அன்னராசா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் கடற்றொழில் சமூகங்களைச் சேர்ந்தவர்களும் சமாசங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும் கலந்துரையாடலில் ஈடுபட்டு இந்தக் குழுவை உருவாக்கியுள்ளனர்.

அதன்படி ஆலோசனை வழங்குவதற்கான அறிஞர் குழுவில் அகிலன் கதிர்காமர், சூசை ஆனந்தன், செல்வின் ஆகியோர் உள்ளடங்கியுள்ளனர்.

இந்த மூவருக்கு அப்பால் கடற்றொழிலாளர்களுக்கு ஆலோசனை வழங்க ஏனைய அறிஞர்கள் முன்வர வேண்டும் - என்றார். (ஒ-14,20)

## ஹெரோய்னுடன் இளைஞர் கைது!

யாழ்ப்பாணம், பெப். 20

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்கானைப் பகுதியில் உயிர்கொல்லி ஹெரோய்னுடன் இளைஞர் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டார் என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சங்கானைப் பகுதியில் இளைஞர் ஒருவர் உயிர்கொல்லி ஹெரோய்னை உடைமையில் வைத்திருக்கின்றார் என்று மானிப்பாய் பொலிஸா ருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலின் அடிப்படையில் அதேபகுதியைச் சேர்ந்த 24 வயது இளைஞர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்தனர். அத்துடன் அவரிடமிருந்து 30 மில்லிகிராம் உயிர்கொல்லி ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டது.

இவர் உயிர்கொல்லி ஹெரோய்ன் வியாபாரத்திலும் ஈடுபடுகின்றார் என்று மானிப்பாய் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளின் பின்னர் இளைஞரை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் மானிப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஒ-14,125)



உரும்பிராய் சிவகாமி அம்பாள் உடனாய சிவபுரீஷ்வரர் திருக்கோயிலில் மஹா சிவராத்திரியை முன்னிட்டு சிறப்புச் சொற்பொழிவு இடம்பெற்றது. தொடர்ந்து சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டன. (எ-14)

# மீனவர்கள் பிரச்சினைகளுக்கு டக்ளஸால் எந்தத் தீர்வுமில்லை

### மன்னார் கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் காட்டம்

மன்னார், பெப். 20

மீனவர்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து அறிக்கையிடுவதோடு முடிந்துவிடுகிறது கடற்றொழில் அமைச்சரான டக்ளஸ் தேவானந்தாவின் செயற்பாடு. பிரச்சினைகளுக்குத் தீர்வை முன்வைக்காத அவர் அந்தப் பதவிக்கு தகுதியற்றவர்– இவ்வாறு கடற்றொழில் மன்னார் மாவட்ட மீனவர் சங்கங்களின் சமாசத் தலைவர் ஆலம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராய மன்னார் மாவட்டத்துக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வருகை தந்துள்ளார். ஆயினும் எமக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.

தனது திட்டங்களை தனது கட்சி சார்ந்து செயற்படுவோர் ஊடாக செயற்படுத்துவதுடன் கேள்விகள் எழுப்பும் அமைப்புக்களை புறக்கணிக்கிறார்.

மன்னார் மீனவர்கள் எரிபொருள் பிரச்சினை, இந்திய மீனவர்களின் வருகை, மின்கட்டண உயர்வு உள்ளிட்டவற்றுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

சீன அரசாங்கத்தால் மீனவர்களுக்கு மானியமாக வழங்கப்பட்ட டீசலை மண்ணெண்ணெய் ஆக மாற்றி மீனவர்களுக்கு வழங்குவதாக அரசு தெரிவித்தது. இரண்டு மாதங்களாகியும் அந்தச் செயற்பாடு நடைமுறையில் இல்லை.

இந்திய மீனவர்களின் அத்துமீறலினால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாக சுட்டிக்காட்டியபோதும் அத்துமீறலை கட்டுப்படுத்துவதற்கு போதிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை .

பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த முன்னாள் மீன்பிடி அமைச்சர் மங்கள அமரவீர காத்திரமான நடவடிக்கைகள் மேற்கொண்டு சிறந்த நிர்வாகியாக இருந்துள்ளார்.

தற்போதைய மீன்பிடி அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா மீனவர்களின் பிரச்சினைகளை ஆராய்வதாகக் கூறி அறிக்கையிடுவதோடு மாத்திரம் நிறுத்திவிடுகிறார் - என்றார். (ச-213)

### வடக்கு- கிழக்கு கடற்பரப்பில்

# சட்டவிரோதமான மீன்பிடி: ஒரு வாரத்தில் 53 பேர் கைது

மன்னார், பெப். 20

வடக்கு- கிழக்கு கடற்பகுதியில் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போது சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 53 பேர் கடந்த ஒருவார காலப்பகுதியில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் மீன்பிடிக்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் கைய கப்படுத்தப்பட்டுள்ளன எனக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளைத் தடுப்பதற்கான இலங்கைக் கடற்படையினரால் கடந்த வாரம் நாட்டின் கரையோரப் பகுதிகளிலும் கடற்பரப்புகளிலும் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது புங்குடுதீவு, மன்னார் அச்சங்குளம், நறுவிலிக்குளம், பாலைதீவுக்கு அப்பால் கல்முனை மற்றும் தீவின் வடக்கு - கிழக்கு கடற்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தனித்தனி நடவடிக்கையின்போது இந்தக் கைதுகள் இடம்பெற்றுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகநபர்களிடமிருந்து 13 டிங்கி படகுகள், 01 மீன்பிடி இழுவை படகு, மீன்பிடி சாதனங்கள், சட்டவிரோதமாக பிடிக்கப்பட்ட மீன்கள், கடல் அட்டை மற்றும் சங்கு குண்டுகள் ஆகியவை கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களும் சான்றுப்பொருள்களுடன் மீன்பிடி பரிசோதகர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் எனக் கடற்படையினர் தெரிவித்தனர். (ச-213)

### உயிரிழந்த மகனின்

# சிறுநீரகத்தை வழங்கிய பெற்றோர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 20

உயிரிழந்த மகனின் சிறுநீரகத்தைத் தானமாக வழங்கிய பெற்றோர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அதிதிகளாக வரவேற்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

சிறுநீரக செயலிழப்பால் அவதியுற்ற ஒருவருக்கு, உயிரிழந்த மகனின் சிறுநீரகத்தை தமது விருப்பத்தின் அடிப்படையில் பெற்றோர் வழங்கினர்.

அவ்வாறு வழங்கி சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு சிகிச்சை வெற்றிகரமாக முடிந்துள்ளது. மாற்று சிறுநீரகத்துடன் நபர் தற்போது நலமாகவுள்ளார் என்று மருத்துவமனை வட்டாரம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையிலே மகனின் சிறுநீரகத்தை வழங்கி மற்றுமொரு நபருக்கு மறுவாழ்வு கொடுத்த பெற்றோர் மருத்துவமனைக்கு அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் சிறுநீரக குருதி சுத்திகரிப்புப் பிரிவில்



விரிவாக்கம் செய்யப்பட்ட மேலும் 3 சிறுநீரக சுத்திகரிப்பு இயந்திரப்பகுதி பெற்றோரால் திறந்து வைக்கப்பட்டது. நிகழ்வில் மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள், தாதியர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள் மற்றும் மருத்துவ பீடாதிபதி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ஒ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகளின் பசிபோக்க மரத்தில் ஏறிய தாய் சாவு!

கொழும்பு, பெப். 20
கம்பளையில் பசியின் கொடுமையால் 4 பிள்ளைகளின் தாய் ஒருவர் உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.
நாரங்விட்ட பகுதியைச் சேர்ந்த சாந்திகுமாரி (வயது-50) என்ற நான்கு பிள்ளைகளின் தாயே உயிரிழந்துள்ளார்.
அவருக்கு நான்கு மகள்கள் உள்ளனர், மூன்றுபேர் பாடசாலை செல்லும் வயதுடையவர்கள். அவரது கணவர் தனியார் நிறுவனத்தில் கூலி வேலை செய்து வருகிறார்.
கணவனின் வருமானம் குடும்பப் பராமரிப்புக்கு போதாததால் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்களை வாங்குதல், உணவு வழங்குதல், மருந்து வழங்குதல் போன்ற பணிகளைச் செய்ய முடியாமல் சிரமத்துக்குள்ளாகியுள்ளார்.
இந்த நிலையில் பிள்ளைகளுக்கு உணவு கொடுக்க பலாக் காயை வைத்து மதிய உணவு தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.
வீட்டின் அருகே இருந்த பலா மரத்தில் ஒரு காய் இருப்பதைப் பார்த்து, அதை பறிக்க பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டார் எனினும் அவை பயனளிக்கவில்லை.
இறுதியாக அவர் பலா மரத்தின் அருகே இருந்த ஜாதிக்காய் மரத்தில் ஏறி பலாக்காயைப் பறிக்க முயற்சித்துள்ளார். இந் நிலையில் பலத்த சத்தம் கேட்டு பிள்ளைகள் மரத்தின் அருகே வந்து பார்த்தபோது, அவர் நிலத்தில் வீழ்ந்து கிடப்பதைக் கண்டு கிராம மக்களின் உதவியை நாடி கம்பளை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர்.
ஐந்து நாள்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற நிலையில் அவர் உயிழந்துள்ளார்.
(அ-ஒ-இ)


# ஜே.வி.பி. அரசியல் 'டீல்'!

சாடுகிறார் சஜித்

கொழும்பு, பெப். 20
ஊழல் ஆட்சியாளர்களை உருவாக்கிய ஜே.வி.பி. அரசியல் 'டீலில்' ஈடுபட்டுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டினார்.
இரத்தினபுரி நகரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாட்டுக்குத் தீர்வுகளை வழங்குவோம் என்று தம்பட்டம் அடிக்கும் சிவப்புத் தம்பிமார்கள் (ஜே.வி.பி.) 2005 இல் ராஜபக்சக்களை ஆட்சிக்கு கொண்டு வருவதற்காக வீடு வீடாகச் சென்றதை மறக்கமுடியாது.
பல்வேறு காலகட்டங்களில் அவர்கள் ஊழல்வாதிகளை ஆட்சிக்கு கொண்டுவர பல்வேறு அரசியல் தந்திரங்களையும், அரசியல் ஒப்பந்தங்களையும் முன்னெடுத்தனர். இந்நாட்டின் ஊழல் மிகுந்த ஆட்சியாளரை உருவாக்கி நாட்டு மக்களை அடிமைகளாக்கியவர்கள்தான் இன்று தாமே ஒரே தீர்வு என்று கூறிக்கொண்டு அதே அரசியல் வியாபாரத்தை மேற்கொண்டு வருகின்றனர்.
நாட்டுக்கு தீர்வுகளை வழங்குவதாகக் கூறும் மக்கள் விடுதலை முன்னணியின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு:-
அவர்கள் தனியார் சொத்துரிமையைத் தடை செய்தால், வியாபாரிகளும், தொழில் முனைவோரும் நலிவடைவார்கள். அவ்வாறு செய்தால் மக்களின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும்.
தீவிர சோஷலிஸ சித்தாந்தமாக அது நடைமுறைப்படுத்தப்பட்டால், ஒரு நாடாக மீண்டும் முன்னேற முடியாதுபோகும். தீவிர சோஷலிஸ கம்யூனிஸ்ட் நாடான சீனா, அமெரிக்காவைத் தாண்டிய முதலாளித்துவப் பொருளாதாரப் போக்கையே கடைப்பிடிக்கின்றது. எனவே உங்களின் சொத்துக்கள், வீடுகள், வணிகங்கள் மற்றும் கடைகளைப் பறிக்கும் தனியார் சொத்துக்களை பறிமுதல் செய்யும் யுகத்தை உருவாக்க இடமளிக்க வேண்டாம் -என்றார்.
(அ-ஒ-இ)

## மரண அறிவித்தல்

தோற்றம்
11 . 09 . 1969



மறைவு
19 . 02 . 2023

### ஜீவரட்ணம் நரேந்திரன்

பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜீவரட்ணம் நரேந்திரன் நேற்று (19.02.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.
அன்னார் சசிகலாவின் அன்புக் கணவரும், கனிஷ்ரன், தனுஷன், பிரசாந் ஆகியோரின் அன்புத் தந்தையும், நிஷாலினியின் அன்பு மாமனாரும், ரமேஸின் (நோர்வே) அன்பு மைத்துனரும், சஸ்வினின் அன்புப் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.02.2023) திங்கட்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 247 4854,
076 734 3762.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 23582) 1/6

# 100அடி பள்ளத்தில் வீழ்ந்த பேருந்து 2 பெண்கள் சாவு! 28பேர் படுகாயம்

சிவனொளிபாதமலை யாத்திரை சென்று திரும்பியபோது நேற்று இரவு அனர்த்தம்

கொழும்பு, பெப். 20
சிவனொளிபாதமலை யாத்திரை சென்று திரும்பிக்கொண்டிருந்த பேருந்து வீதியை விட்டு விலகி 100 அடி பள்ளத்துக்குள் விழுந்து விபத்துக்குள்ளானதில் இரண்டு பெண்கள் உயிரிழந்தனர். 28 பேர் வரை காயமடைந்துள்ளனர். நோர்ட்டன் பிரிட்ஜ் பகுதியில் பேருந்து வீதியை விட்டு விலகி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியபோதே இந்த அனர்த்தம் நேற்று இரவு ஏற்பட்டுள்ளது.
காயமடைந்தவர்களை வட்டவலை மற்றும் நாவலப்பிட்டி மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்துக்குள்ளான பேருந்தில் பயணித்தவர்கள் கொழும்பின் புறநகர் மஹரகமையில் இருந்து சிவனொளி பாத மலைக்குச் சென்றவர்கள் என்பது தெரியவந்துள்ளது.
(ஒ-இ)

## மரண அறிவித்தல்

தோற்றம்
03 . 11 . 1939



மறைவு
19 . 02 . 2023

### இரத்தினசிங்கம் சரசுப்பிள்ளை

சுன்னாகம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசிங்கம் சரசுப்பிள்ளை நேற்று (19.02.2023) ஞாயிற்றுக்கிழமை அமரத்துவம் அடைந்துவிட்டார்.
அன்னார் சபாபதி முத்துப்பிள்ளை தம்பதியரின் மகளும், அமரர் இரத்தினசிங்கம் (இலங்கை மின்சார சபை) அவர்களின் அன்பு மனைவியும், இரத்தினாம்பிகை, அமரர் சரசிங்கம், செல்வநாயகி, தசநாயகி (சுவிஸ்), சிவதேவி, அமரர் கேசவராஜா ஆகியோரின் அன்பு தாயாரும், நவரத்தினம் (ஓய்வு நிலை உத்தியோகத்தர்), ஜெயஆனந்தராசா (ஓய்வுநிலை உத்தியோகத்தர்), உதயராசா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், தர்சினி, கிருபாகரன் (இ.மி.சபை), துஷ்யந்தி, திவாகரன் (கிருபா லேனேர்ஸ்), தேனுகா (மருந்தகம், யாழ்ப்பாணம்), ஜெயபிரியந்தன் (ஆசிரியர், யா/புனித அந்தோனியார் கல்லூரி), கயானீ (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், சங்கானை), மிதுனன் (சுவிஸ்), அபினாஸ் (சுவிஸ்), தனுசன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், பவித்திரன், சஜித்திரன், கஸ்விகா, தன்சிகா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.02.2023) திங்கட்கிழமை ந.ப. 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 309 0920

(CS 23580) 1/6

### தேர்தலை...

தேர்தல் நடக்காமல் பிற்போடப்பட்டால் அந்தக் குள்ளநரித்தனத்தையும் வெளிக்கொண்டு வருவோம். -இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கான வேட்பாளர் அறிமுகக்கூட்டம் முல்லைத்தீவு-புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
மக்கள் தேர்தல் நடக்குமா என்று கேட்கின்றார்கள். ஜனாதிபதிக்கு தேர்தலைச் சந்திக்கப் பயம். இதன் காரணத்தால் தேர்தலை பிற்போடப் பார்க்கின்றார்கள்.
மாகாணசபைத் தேர்தலையும் பெரும்சூழ்ச்சியால் காலவரையறையின்றிப் பிற்போட்டுவிட்டார்கள். 2019 ஆம் ஆண்டு மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்காக தனிநபர் சட்டவரைவை நாடாளுமன்றத்தில் நான் சமர்ப்பித்தேன்.
இப்போது அவர்கள் என்ன செய்கின்றார்கள்? மாகாண அதிகாரமும் கிடையாது. உள்ளூராட்சி அதிகாரங்களையும் பாவிக்கவிடாமல் பறித்து எடுத்துவிட்டார்கள். மக்கள் ஆணை இல்லாமல், குறுக்குவழியில் ஜனாதிபதியாக வந்த ஒருவர் முழு அதிகாரத்தையும் தன் கைக்குள் கொண்டுவரும் சூழ்ச்சி தான் தேர்தலை பிற்போட எடுக்கப்படும் நடவடிக்கை. இதற்கு எதிராக நாங்கள் திரண்டெழ வேண்டும்.
இந்தத் தேர்தலின் முக்கியத்துவத்தை உணர்ந்த காரணத்தினால்தான் தேர்தலைப் பிற்போட முனைகின்றார்கள். தேர்தல் வந்தால் ஆட்சியில் இருப்பவர்களை மக்கள் தூக்கி கடாசி விட்டார்கள் என்பது தெட்டத்தெளிவாகத் தெரியவரும் - என்றார்.
(அ-ஒ-19)

### பருத்தித்தீவில்...

ஊர்காவற்றுறை கண்ணகை அம்மன் இறங்குதுறைக்கு கடந்த 16ஆம் திகதி மாலை 'கப்' ரக வாகனத்தில் இரண்டு சீனப் பிரஜைகள் வந்துள்ளனர். அவர்களை, ஆளும் கட்சியின் யாழ். மாவட்ட பிரமுகர் ஒருவரே கொண்டு வந்து இறக்கியுள்ளார். இறங்குதுறையிலிருந்து தனிப் படகில் அவர்களை, கொலைச் சந்தேகநபரான வேறொரு பிரமுகர் அழைத்துச் சென்றுள்ளார். அவர்கள் முதலில் அனலை தீவில் சென்று இறங்கியுள்ளனர். அங்கு மோட்டார் சைக்கிளில் ஊரைப் பார்வையிட்டுள்ளனர். அதன்பின்னர் அங்கிருந்து சென்று பருத்தித்தீவில் இறங்கியுள்ளனர். சீனப் பிரஜைகள் படகில் எழுவைதீவுக்கு வடக்கே 9 கடல் மைல் தொலைவில் சுற்றித்திரிந்ததையும் மீனவர்கள் கண்டுள்ளனர்.
பருத்தித்தீவில் தங்கியிருந்த சீனப் பிரஜைகள் நேற்றுமுன்தினம் இரவு தனிப் படகு மூலமாக இரகசியமாக அழைத்து வரப்பட்டு அவர்கள் கொழும்பு திரும்பியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ-ஒ-5-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 13 ஆம்...

யிட்டுள்ளார். இதற்கு எதிராக இலங்கை அரசு போர்க்கொடி தூக்கக்கூடாது என்பதற்காகவே வடக்கும், கிழக்கும் முழுவதுமாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் கைகளிலேயே உள்ளன என்றும் அவர் கூறியுள்ளார். அண்ணாமலையின் இந்த விசமத்தனமான கருத்துக்களை வன்மையாகக் கண்டிக்கின்றோம் -இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

இலங்கையைப் பொறுத்தவரை வடக்கு-கிழக்கு மாகாணங்கள் மோடியின் கைகளில்தான் உள்ளன என்று இலங்கைக்கு வந்து சென்ற பின்னர் சென்னையில் வைத்து பா.ஜ.கவின் தமிழகத் தலைவர் அண்ணாமலை கருத்து வெளியிட்டிருந்தார். இது தொடர்பில் கொழும்புச் செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கே சரத் வீரசேகர மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார்.

'அண்ணாமலை கூறுவதுபோல் 13 ஆவது திருத்தச் சட்டம் தீர்வாக அமையாது. ஏனெனில் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த நாம் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம். நடைமுறைக்குச் சாத்தியம் இல்லாத காணி, பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் உளறுவதை இந்தியத் தரப்பினர் உடனடியாக நிறுத்திக்கொள்ளவேண்டும். இது 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கான நேரம் அல்ல. 13ஆவது திருத்தத்தை நாடாளுமன்றம் ஊடாக முழுமையாக இல்லாதொழிப்பதற்கான நேரமே கனிந்துள்ளது. இலங்கையில் 13க்கு எதிராக பிக்குகள்கூட வீதியில் இறங்கியுள்ளமை அண்ணாமலைக்குத் தெரியவில்லையா? இது பௌத்த நாடு என்பதை அவர் மறந்து விட்டாரா?' - என்றார். (அ-ஒ-5-22)

### வடக்கு...

காணப்படுகின்றது. இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கையும் கிழக்கையும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் கைகளிலே இலங்கை அரசு எப்போது தாரைவார்த்தது? வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் தலைவராக மோடி எப்போது பிரகடனப்படுத்தப்பட்டார்? அண்ணாமலையின் கருத்துக்கள் ஊடாக எம்மிடம் எழுந்துள்ள இந்தக் கேள்விகளுக்கு இலங்கை அரசு உடனடியாகப் பதிலளிக்கவேண்டும்.

அண்ணாமலை அண்மையில் இலங்கை வந்து தமிழகம் திரும்பிய பின்னர் சர்ச்சைக்குரிய இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார். இதன் பின்புலம் தொடர்பில் நாம் தீவிரமாக ஆராய வேண்டும்.

இந்தியாவில் உள்ள ஒரு தரப்பினர் பிரபாகரனின் பெயரை வைத்து அரசியல் நடத்த, அண்ணாமலை மோடியையும் வடக்கு - கிழக்கையும் இணைத்துப் பேசி அரசியல் நடத்துகின்றார். இலங்கை அரசு இவற்றையெல்லாம் கைகட்டி ஏன் வேடிக்கை பார்க்கின்றது? எல்லாம் மர்மமாகவே உள்ளது - என்றார்.

(அ-ஒ-5-22)

### தேர்தல் ஒத்திவைப்பு...

இந்த மனு கடந்த 10 ஆம் திகதி எடுத்துக்கொள்ளப்பட்டபோது, மனுவை 23ஆம் திகதி பரிசீலிக்க உயர் நீதிமன்றத்தின் 3 நீதிபதிகள் அடங்கிய குழாம் உத்தரவிட்டது.

ஆயினும், அன்றைய திகதிக்கு முந்திய திகதியொன்றில், அதனைப் பரிசீலிக்குமாறு மனுதாரர் நகர்த்தல் பத்திரம் மூலம் நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்திருந்தார். அதன்படி, உள்ளூராட்சி தேர்தலை ஒத்திவைத்து உத்தரவு பிறப்பிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுவை இன்று பரிசீலிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், நிதிப்பற்றாக்குறை காரணமாக வாக்குறுதியளித்தபடி உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்த முடியாது என உயர் நீதிமன்றத்துக்கு பிரேரணையின் மூலம் அறிவிக்கவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமால் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார். (அ-ஒ-இ)

### இரகசியமாக...

தாகவும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அண்மையில் இரண்டு பெரிய விமானங்கள் வருகை தந்திருந்தன. ஆனால், அது தொடர்பாக ஊடகங்கள் அமெரிக்கத் தூதரகத்தை வினவிய போதும் அதற்குப் பதில் வழங்கப்படவில்லை.

அமெரிக்காவின் தூதுக்குழுவொன்று இலங்கைக்கு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஆனாலும் ஒரு தூதுக்குழுவில் ஆகக்கூடுதலாக 25 பேர் உள்ளடங்கியிருந்தாலும் எதற்காக இவ்வாறு இரண்டு சரக்கு விமானங்கள் வருகை தந்தன என்பது தொடர்பில் சந்தேகம் நிலவுகின்றது.

தற்போதைய அரசாங்கம் ஜனநாயக விரோத அரசாங்கம். இந்தத் திருட்டு அரசாங்கம் தொடர்ந்தும் ஆட்சியில் இருப்பதற்காக வெளிநாட்டுத் தரப்புக்கு சொத்துக்களை விற்கக்கூடிய நிலையிலேயே காணப்படுகின்றது. எனவே வெளிநாடுகள் தமது நலன்களை அடைவதற்காக இலங்கையை சூறையாடக்கூடிய சூழலே உள்ளது - என்றார்.

(அ-ஒ-இ)

### பௌத்த...

பௌத்த மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் 2023ஆம் ஆண்டு வெசாக் பண்டிகையை அரச தலைமீட்டுடன் நடத்துமாறு மல்வத்து, அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் விடுத்த அழைப்பை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டாரென ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (அ-ஒ-இ)

### எப்படியிருந்தவர்...

சென்றுள்ளார். அவர் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் இராஜதந்திர வாசல் வழியாகச் செல்லாமல், சரக்கு விமானங்களுக்குரிய வாசல் ஊடாகவே சென்றுள்ளார். (அ-ஒ-6)

### தேர்தல் பணிகள்...

பரப்புரை சொல்லிக்கொள்ளும்படியாக இருக்கவில்லை.

இந்த நிலையில் தபால்மூல வாக்களிப்பு ஒத்திவைக்கப்பட்டு, தேர்தல் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளபோதும், தமது பரப்புரைகளை தமிழ்த் தேசியக் கட்சிகள் முடுக்கிவிட்டுள்ளன.

தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி. வி. விக்னேஸ்வரன் நேற்றுமுன்தினம், தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தி தமது பரப்புரையை ஆரம்பித்தார். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் நேற்றையதினம் பரப்புரையில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-5)

### மின்விளக்குகளை...

மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

இது தொடர்பில் மக்கள் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய இயக்கத்தின் அமைப்பாளர் அனுருத்த சோமதுங்க தெரிவித்ததாவது:-

இன்று மாலை 7 மணிக்கு, உங்கள் வீட்டின் அனைத்து மின்விளக்குகளையும் அணைக்கவும். மின்சாதனங்களைப் பயன்படுத்துவதை நிறுத்தவும். இதன் விளைவை அடையாளபூர்வமாகப் பிரபலப்படுத்துவோம் - என்றார். (அ-ஒ-இ)

### தமிழ்...

அதன் ஊடாக தனது உறுப்பினர்களை நியமிக்கச் செய்வதற்குரிய 'குறுக்கு வழியை' அந்தக் கட்சி உறுதிப்படுத்தியுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேசசபையில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டது. அங்கீகரிக்கப்பட்ட முகவர் வேட்புமனுவைச் சமர்ப்பிக்கவில்லை என்பதால் மனு நிராகரிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து நீதிமன்றை நாடியபோதும் தமிழ் அரசுக் கட்சியின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

இந்த நிலையில் இதற்கான மாற்று வியூகம் ஒன்றை இலங்கை தமிழ் அரசுக் கட்சி அமைத்து அது தொடர்பான விசேட கலந்துரையாடல், கரைதுறைப்பற்று பிரதேசசபை மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

ஐக்கிய தேசியக் கூட்டமைப்பு எனும் கட்சியில் தராசுச் சின்னத்தில் போட்டியிடும் கட்சியின் உறுப்பினர்களைப் பதவி விலகச் செய்து, அதன் ஊடாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தனது உறுப்பினர்களை நியமிக்கவுள்ளது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவுக் கட்சியே ஐக்கிய தேசியக் கூட்டமைப்பாகும். கரைதுறைப்பற்றிலுள்ள முஸ்லிம் வட்டாரம் தவிர்ந்த ஏனைய வட்டார மற்றும் விகிதாசார வேட்பாளர்கள் பதவி விலகி இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியினருக்கு வழிவிடவுள்ளனர்.

இந்தக் கலந்துரையாடலில் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ. சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (அ-ஒ-14-19)


**காணி விற்பனைக்கு**

இயக்கச்சியில் 48 ஏக்கர் காணி விற்பனைக்கு.

(தரகர் தேவையில்லை)

**Whatsapp: 076 009 3587**

**காணி விற்பனைக்கு**


திருநெல்வேலி மருத்துவ பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு.

(தரகர் தேவையில்லை)

தொடர்பு: 077 209 8826


## மரண அறிவித்தல்

மண்ணில் • 03 • 02 • 1958



விண்ணில் • 17 • 02 • 2023

### பேராசிரியர் இரட்ணம் விக்கினேஸ்வரன்

**(முன்னாள் துணைவேந்தர் - யாழ். பல்கலைக்கழகம்)**

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பேராசிரியர் இ.விக்கினேஸ்வரன் அவர்கள் கடந்த (17.02.2023) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் பஞ்சவர்ணம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற செல்லப்பா நடராஜா (பார்லிமன்ற்) மற்றும் பத்மாதேவி தம்பதியரின் அன்பு மருமகனும், பவானியின் அன்புக் கணவரும், விசாகன் (யாழ். இந்துக் கல்லூரி), வாசனா (உடுவில் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற பாலதேவி மற்றும் கமலாதேவி ஆகியோரின் அன்பு பெறாமகனும், காலஞ்சென்ற மேனகா மற்றும் சண்முகேஸ்வரன் (ஓய்வுநிலை ஆசிரியர்), ரேணுகா (கனடா), மல்லிகா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் ஜீவகாந்தி, சிவகுமார் (கனடா), ஆனந்தமுருகன் (லண்டன்), கிங்ஸ்லி பெனடிக்ற் (கனடா), கல்யாணி (அமெரிக்கா), வாகீசன் (கனடா), தாரணி (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுஜீவன் (கனடா), ஜெனீபன் (கனடா), மாதுளன், தென்றல், கபிலன், நிலானி, அக்னஸ் காயத்ரி, கிருத்திகன், காயத்ரி ஆகியோரின் அன்பு மாமனாரும், இனியாள், ஆரபி (கனடா), கனிமொழி, தாமரா, அபிரா, சாம்பவி, வருண், ஜீவன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.02.2023) செவ்வாய்க்கிழமை மு.ப. 9.00 மணிதொடக்கம் மு.ப. 11.00 மணிவரை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மு.ப 11.30 மணியளவில் அஞ்சலிக்காக யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கு எடுத்துச் செல்லப்படும். பின்னர் பி.ப 1.00 மணியளவில் அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக கே.கே.எஸ் வீதி, இணுவில் கோயில் வாசல் சந்தியிலிருந்து காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.62, சைவப்பா சாலை வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**021 205 3416**
**075 041 5497**

KS 23581/1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு







பிறப்பு
29.12.1949

இறப்பு
23.01.2023

## கடந்த (23.01.2023) திங்கட்கிழமை சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவி

### மண்கும்பானின் புதல்வி

# அமரர் திருமதி நடராசா தங்கமலர்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (20.02.2023) திங்கட்கிழமை காலை 6.00 மணி யளவில் புனித சாட்டி தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் எதிர்வரும் (22.02.2023) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**(இல. 55, அம்பலவாணர் வீதி, அத்தியடி யாழ்ப்பாணம்)**

**அன்னாரின் நினைவாக மூன்று வேளைகளும்**
**பின்வரும் நிலையங்களில் கீழ் குறிப்பிட்ட திகதிகளில் உணவு வழங்கப்படும்**

1. (21.02.2023) வாழ்வகம் - சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம் - 021 224 0146
2. (22.02.2023) சந்நிதியான் ஆச்சிரமம் - சைவ கலை பண்பாட்டுப் பேரவை செல்வச் சந்நிதி தொண்டைமானாறு - 021 226 3406
3. (22.02.2023) விசேட தேவைக்குட்பட்ட சிறுவர்களின் வலுவூட்டும் இணையம் 20/1, உபதபாலக வீதி, அலகு 1 திருவையாறு, கிளிநொச்சி - 021 228 2906

.23372) (2.6)

நியூ மைதிலி ஜுவல்லர்ஸ்
இல. 38,40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சந்தோஷ் ஜுவல்லர்ஸ்
இல. 97A,99V, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
மகன்: நடராசா கஜந்தன்
நியூ மைதிலி ஜுவல்லர்ஸ்
சந்தோஷ் ஜுவல்லர்ஸ்

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம் : advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.02.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org